**வரையறுக்கப்பட்ட கப்பல் மற்றும் விமான சேவைகள் தகவல், ஆராய்ச்சி (தனியார்) கம்பனி - 2015**

---

வரையறுக்கப்பட்ட கப்பல் மற்றும் விமான சேவைகள் தகவல், ஆராய்ச்சி (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் உருவாக்கம் மற்றும் உரித்து

வரையறுக்கப்பட்ட கப்பல் மற்றும் விமான சேவைகள் தகவல், ஆராய்ச்சி (தனியார்) கம்பனியானது 2009 யூலை 10 ஆந் திகதி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. அப்போதிருந்த இலங்கை கப்பல்களுக்கான இடவசதிகளை ஒதுக்கும் பணியகம் கலைக்கப்பட்டு அதற்கு சொந்தமாக இருந்த அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் இந்தக் கம்பனியால் கையேற்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் கம்பனியின் மொத்த மூலதன உரித்தும் திறைசேரியிடம் காணப்பட்டது.

## 1.5 கம்பனியை கலைத்தல்

2012 ஆம் ஆண்டு முதல் கம்பனி தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன் நிலையானச் சொத்துக்களின் முதலீட்டின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் தவிர கருத்திற்கொள்ளக்கூடிய ஏனைய செயற்பாட்டு வருமானம் மீளாய்வாண்டு வரையிலும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அமைச்சரவையால் இந்த கம்பனியை தொடர்ந்தும் நடாத்திச் செல்லல் அர்த்தமற்றது என்பதால் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 2.2 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை வரையறுக்கப்பட்ட கப்பல் மற்றும் விமான சேவைகள் தகவல், ஆராய்ச்சி (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல்  இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி உறுப்படுத்தல்களின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் நிலவிய நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 27,047,362 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 26,913,457 ஆக காட்டப்பட்டமையின் காரணத்தால் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 133,905 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டி வருமானத்தின் அடிப்படையில் அறவிடப்பட்ட ரூபா 209,937 தொகையான நிறுத்தி வைத்தல் வரி கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் அட்டுறு செலவினம் ரூபா 578,328 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 652,184 ஆனமையால் ரூபா 73,856 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்ற

(அ) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த நிலையான வைப்புக்களின் வட்டி வருமானத்தின் அடிப்படையில் வங்கியால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 930,355 தொகையான நிறுத்தி வைத்தல் வரித் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிராததுடன் மீள அறவிடலும் நிச்சயமற்றதாக காணப்பட்டது.

(ஆ) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்பட வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 518,333 தொகையான இரு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2014 யூலை 25 ஆந் திகதிய எஸ்ஈசீ/2014/05 ஆம் இலக்க சுற்றறிக்கை | கம்பனியால் தலைவரின் ஊதியத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கை | கம்பனியில் நிறைவேற்று அதிகாரமற்ற 06 பணிப்பாளர்களுக்கும் கம்பனியின் சேவை தருநர் அல்லாத ஏனைய மூன்று உத்தியோகத்தர்களுக்கும் படிகளை செலுத்தும் போது குறித்த சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 10 சதவீதமான நிறுத்தி வைத்தல் வரி (WHT) அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 இன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | இருப்பு மற்றும் நிலையானச் சொத்துக்கள் தொடர்பில் வருடாந்த பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், கம்பனியால் 2014/2015 நிதியாண்டுக்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. |

## 3. நிதிமீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 2,071,909 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 878,942 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,192,967 இனால் அல்லது 136 சதவீதத்தால் நலிவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் செயற்பாட்டு வருமானம் உழைத்திருக்காமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,804,806 இனால் குறைவடைந்தமை மேற்படி வீழச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுத்தராய்ந்து பார்க்கும் போது 2010/2011 நிதியாண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் கம்பனி தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன், வருடாந்தம் அந்நட்டம் அதிகரித்தவாறு காணப்பட்டது. அவ்வாறே ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2010/2011 கணக்காண்டின் போது ரூபா 1,053,517 ஆன நேர்ப் பெறுமதியான பங்களிப்பு 2014/2015 கணக்காண்டின் போது ரூபா 656,365 ஆன மறைப் பெறுமதியில் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்ற.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கம்பனியின் நிர்வாக மற்றும் நிதி செலவினங்கள் 18 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் நிலையான வைப்புக்களுக்காக நிலவிய வட்டி விகிதம் 12.75 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதம் வரை குறைவடைந்தமையும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,501,142 தொகையான நிலையான வைப்புக்கள் தேறியமையின் காரணமாக நிலையான வைப்புக்களின் மீது கிடைத்த வட்டி வருமானம் 51 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனமாக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 30,000,000 தொகையான பணம் கம்பனியின் நிர்வாக மற்றும் நிதிச் செலவினங்களை மேற்கொள்வதற்காக நிலையானச் சொத்துக்கள் தேறியமையின் காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 26,913,457 வரை அல்லது 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், நிறுவனம் தொடர்ந்தும நட்டமடைந்ததன் காரணத்தால் தேறிய நட்டம் சீராக்கம் செய்யப்பட்ட பின்னரான நிறுவனத்தின் மூலதனம் ரூபா 25,221,887 வரை அல்லது 16 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனியின் பிரதான நோக்கங்கள் பொழிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

- கடல் மற்றும் விமானம் மூலம் மேற்கொள்ளப்படும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்குரிய தரவுகள் மற்றும் தகவல்களை சேகரித்தல், பகிர்ந்தளித்தல், பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அவ்வாறான செயற்பாடுகளை மேம்படுத்தும் முயற்சிகளை நடாத்துதல் மற்றும் உரிய அமைச்சரால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- கடல் மற்றும் விமானம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்து பணிகளுக்குரிய தரவுகள் மற்றும் தகவல்களை சேகரித்தல், பகிர்ந்தளித்தல், பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளல், அவ்வாறான செயற்பாடுகளை மேம்படுத்தும் முயற்சிகளை நடாத்துதல் மற்றும் உரிய அமைச்சரால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- கடல் மூலம் மற்றும் விமானம் மூலம் மேற்கொள்ளப்டுகின்ற போக்குவரத்து இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பணிகளுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை இலாபமீட்டும் அடிப்படையில் மேற்கொள்ளல்.

- துறைமுக, கப்பல் மற்றும் விமானத்துறைகளுக்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை இலாமீட்டும் நோக்கில் பெற்றுக்கொள்ளல் மற்றும் மேற்கொள்ளல்.

- இறக்குமதி, ஏற்றுமதி மற்றும அதனுடன் தொடர்புடைய துறைகளில் பயிற்சி வழங்குதல் மற்றும் மதியுரைச் சேவை முயற்சிகளை மேற்கொள்ளல்.

- மேற்படி நோக்கங்களுக்குரிய பயிற்சி நடவடிக்கைகள், விரிவுரைகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்ச்சித்திட்டங்களின் உருவாக்கம் தொடர்பில் முயற்சிகளை மேற்கொள்ளல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கம்பனியால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 09 ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் மீளாய்வாண்டினுள் பல்வேறு நிறுவனங்கள் தொடர்பிலான 07 ஆராய்ச்சி முன்மொழிவுகளும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் எந்தவொரு முன்மொழிவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர் சபையினால் முன்னைய ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்த சில ஆராய்ச்சி முன்மொழிவுகள் கம்பனி தாபிக்கப்பட்டமைக்கான நோக்கத்திலிருந்து விலகிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் என்பது அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறான ஆராய்ச்சி முன்மொழிவுகள் சில பின்வருமாறு.

(i) அரசின் அபிவிருத்தி மக்களுக்கு தாக்கமேற்படுத்தும் விதம் தொடர்பான ஆராய்ச்சி

(ii) ஜயவர்த்தனபுர மருத்துவமனையை பயன்படுத்துவோரின் திருப்தி தொடர்பான ஆராய்ச்சி

(iii) சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய ''ஹோம் ஸ்டே கன்செப்ட்'' தொடர்பான ஆராய்ச்சி

(iv) இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்களின் திருப்தி தொடர்பான ஆராய்ச்சி

(v) சனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்துக்களை வினவும் பரிசோதனை

(இ) சிறைச்சாலையினுள் இருக்க வேண்டிய வசதிகளை அபிவிருத்தி செய்தலுடன் தொடர்புடைய ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 545,000 தொகையான முற்பணம் பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை. சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் நிலவிய அசௌகரியங்களினால் ஆராய்ச்சியை பூர்த்தி செய்ய முடியாது போனதாக அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்றின் அடிப்படையில் குறிப்பான இலக்குகள் நிறுவப்பட்டிராமை மற்றும் திட்டமிடப்பட்டவாறு செயற்படாமை போன்ற காரணங்களால் மீளாய்வாண்டின் போது கம்பனி எந்தவொரு செயற்பாட்டின் மூலமும் வருமானம் ஈட்டியிருக்கவில்லை. எவ்வாறாறெனினும் மீளாய்வாண்டின் போது கம்பனியின் பதவியணி மற்றும் பணிப்பாளர் சபைக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,361,377 செலுத்தப்பட்டிருந்தது.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியின் பங்கு மூலதனத்திற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 30,000,000 தொகையான நிலையான வைப்புக்களில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ரூபா 26,000,000 தொகையான வைப்புக்களை பிணையாக வைத்து ரூபா 3,000,000 தொகையான வங்கி மேலதிகப் பற்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வங்கி மேலதிகப் பற்று கம்பனியின் மீண்டெழும் செலவினங்களை கொடுப்பனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்ந்து செலவிடப்படவேண்டிய செலவினங்களுக்காக நிலையான வைப்பில் ரூபா 1,501,142 தொகை மீளப்பெற்று செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 07 பேரைக் கொண்டிருந்ததுடன் உள்ளவாறான பதவியணி 03 பேரை கொண்டிருந்தமையால் 04 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) கம்பனியின் பிரதான நோக்கமானது கப்பற்துறை மற்றும் விமானம் பயன்பாடு தொடர்பான தகவல்களை சேகரித்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதே என்ற போதிலும் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாது போயிருந்தது.

## 4.4 ஊழியர் பணிக்கொடைக்காக நிதியமொன்றை உருவாக்குதல்

கம்பனியால் ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக எதிர்கால கடப்பாட்டிற்காக முதலீட்டுத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 16 மாதங்களுக்கு அதிக தாமதத்தின் பின்னர் 2016 ஒக்தோபர் 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைபு ஆண்டறிக்கையானது 2016 திசெம்பர் 31 ஆந் தகிதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் 03 வருட காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினது ஒருங்கிணைப்பாட்டுடன் குறித்த அமைச்சின் செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2014 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2014/2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன பணிப்பாளர் சபையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவானது ஆகக்குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடு, நிதி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான எதிர்வு கூறல்கள் குழுக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேறியுள்ளதா என்பது சிக்கலான நிலைமையொன்றாகியிருந்தது.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிவாரி நிறுவனமொன்றின் உத்தியோகத்தரொருவர் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 5000 படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் முறையான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | முறையான மூல ஆவணங்கள் மற்றும் பேரேட்டுப் பதிவுகள் பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) மனிதவள முகாமைத்துவம் | முறையாக ஊழியப் பற்றாக்குறைகளை நிரப்பாமை |
| (இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்யாமை |
| (ஈ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | கம்பனி தாபிக்கப்பட்ட நோக்கத்திற்கு இணங்க செயலாற்றலொன்று இல்லாதிருந்தமை |